[26th March 1964

திருமதி டி. என். அனந்தநாயகி : சார், இந்தக் கமிட்டி வெறும் ட்ராபிக் ப்ராப்ளத்தை மட்டும் கவனிக்குமா அல்லது ரூட்கள் அதிக மாக்கப் படுவது, திருப்புவது, எக்ஸ்டென்ஷன் செய்வது போன்ற வைகளிலும் கருத்துக்களைக் கொடுக்கலாமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த அதிகாரம் கிடையாது.

மாநில போக்குவரத்துக் குழு

*420 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம் மாநில போக்குவரத்து ஆலோசனைக் குழு ஒன்று புதிதாக அமைக்கப்பட்டது உண்மையா ?

(இ) ஆ னில், எப்போது அமைக்கப்பட்டது ?

(உ) அதன் உறுப்பினர்கள் யார் யார் என்ற விவரம் சபை முன் வைக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) The Committee has been reconstituted in January 1963.

(*c*) A statement[a] is placed on the table of the House.

திரு. து. ப. அழகமுத்து : சார், இதற்கு உறுப்பினர்களைப் போடுவதில் மாவட்ட வாரியாக பிரதிநிதித்துவம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அப்படி பிரதிநிதித்துவம் இல்லை. நம்முடைய மேல் சபைக்கு சில பிரதிநிதிகள், இந்த மன்றத் திற்கு சில பிரதிநிதிகள், மோட்டார் ட்ரான்ஸ்போர்ட் வைத்திருக் கிறவர்களுக்கு பிரதிநிதித்துவம், தொழிலாளிகளுக்குச் சில பிரதி நிதிகள், லாரி ஓனர்களுக்கு சில பிரதிநிதிகள் என்ற அளவில் இருக்கிறது.

டாக்டர் பா. நடராஜன் : ஸார், கன்யாகுமரி மாவட்டத்திற்கு பிரதிநிதித்துவம் கொடுக்கக் கூடாது என்று ஏதாவது இருக் கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கன்யாகுமரி மாவட்டத்தில் நான் சொன்ன கிளாசிபிகேஷனில் யாரும் வராமல் போய்விட்டார் களோ என்னவோ தெரியாது.

SRI V. S. S. MANI : May I know the functions of the State Transport Advisory Committee?

THE HON. SRI R. VENKATARAMAN : The State Transport Advisory Committee advises the Government on all transport problems relating to the running of buses and lorries, issue of licences, opening of routes, administration of Motor Vehicles Act and so on.

---

[a] Printed as Appendix II on pages 111–115

26th March 1964]

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, மாநில போக்குவரத்து ஆலோசனைக் குழு பரிசீலித்து கொடுக்கிற ஆலோசனைகளை அரசாங்கம் அப்படியே ஏற்றுக்கொள்ளுமா அல்லது மறு பரிசீலனை செய்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது ஒரு அட்வைசரி கமிட்டிதான்.

கனம் சபாநாயகர் : அரசாங்கம் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றால் அதற்குப் பெயர் ஆலோசனைக் கமிட்டி என்று சொல்ல முடியாது.

திரு. து. ப. அழகமுத்து : நம்முடைய சட்டசபைக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கப்படுகிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிக் கொடுத்திருப்பது கட்சியின் பலத்தை அடிப்படையாக வைத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறதா அல்லது சர்க்காருக்கு தோன்றின விதத்திலா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த சட்டசபையில் ஒரு மெம்பராக இருக்கிற கட்சிக்குக்கூட பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. கட்சி எண்ணிக்கையை வைத்து கொடுக்கப்படவில்லை. உதாரணமாக எதிர் கட்சித் தலைவர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள், திரு. கணேசன் அவர்கள், திரு. கலியாணசுந்தரம் அவர்கள், திரு. நல்லசிவம் அவர்கள் எல்லோரும் இருக்கிறார்கள்.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, இந்த மாநில போக்குவரத்து ஆலோசனைக் கமிட்டி செய்வதை மாவட்ட ரஸ்தா போக்குவரத்து அபிவிருத்தி திட்டக் கமிட்டி செய்ய முடியாதா ? அப்படி அதற்கு அதிகமான அதிகாரத்தை வழங்க சர்க்கார் முன்வருவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த விதமான ஆலோசனை இப்பொழுது இல்லை.

திருமதி டி. என். அனந்தநாயகி : சார், இந்த அட்வைசரி கமிட்டி ஆண்டுக்கு எத்தனை முறை கூடுகிறது ? ஜி.ஓ.க்களை எல்லாம் சுப்ரீம் கோர்ட்டிலே செல்லாது என்று தீர்மானிக்கப்பட்டு இருக்கிறதே, அது பற்றி என்ன நடவடிக்கை எடுப்பதாக அரசாங்கத்திற்கு யோசனை ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த ஆலோசனைக் கமிட்டி சென்ற டிசம்பர் மாதத்தில்தான் கூடியது. இப்பொழுது இரண்டு மூன்று மாதங்கள்தான் ஆகியிருக்கின்றன. வருஷத்திற்கு இரண்டு முறை கூடவேண்டும் என்று யோசித்துக்கொண்டு இருக்கிறோம். கோர்ட் தீர்ப்பு பற்றி தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் கொடுக்கலாம்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.